1986 மே 10]

கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. மாவட்டங்களில், அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள கோதுமை உருளைமாவு ஆலைகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. கோதுமையின் பயன், அதில் உள்ள ஊட்டச் சத்து போன்றவற்றை பொதுமக்களுக்கு விளக்க செய்திப்படம் எடுக்கப்படுகிறது. மேலும் கோதுமையை சுத்தம் செய்து சிப்பங்களில் விற்பதற்கான ஏற்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

50—

தொடுவட்டி—திருவனந்தபுரம் பேருந்துப் பணி.

வினா 7613—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொடுவட்டி சந்திப்பிலிருந்து திருவனந்தபுரத்திற்கு காலையிலும், மாலையிலும் இரு பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தொடுவட்டி—திருவனந்தபுரம் வழித்தடம் தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே உள்ள தடமாக இருப்பதால், இம்மாநிலங்களுக்கிடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க முடியும். ஆனால் தொடுவட்டி—திருவனந்தபுரம் தடத்தில் மொத்தத் தூரமான 40 கி. மீட்டரில் 33 கி. மீட்டர் கேரள மாநில எல்லையில் இருப்பதால் அந்த மாநிலம் இத்தடத்தில் பேருந்தை இயக்குவதற்கு ஒப்புதல் அளிப்பது கடினம்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10–40)

2. ஒழுங்குப் பிரச்சனை

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கம் குறித்து மேலவையில் தெரிவிக்கப்பட்ட கருத்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான ஒழுங்குப் பிரச்சனைகளை எழுப்புவதற்கு தாங்கள் அருள் கூர்ந்து எனக்கு அனுமதியை

வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக நேற்றையதினம் இந்த மாமன்றத்திலே தமிழ்நாடு சட்டமன்ற மேலவை ஒழிக்கப்படுமா என்று கேள்வி கேட்டதற்கு அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால் இந்த அவை நடந்து கொண்டிருக்கும் இந்த காலக் கட்டத்திலே சற்றைக்கு முன்னால் சட்டமன்ற மேலவையில் கொள்கைஅளவில் சட்டமன்ற மேலவையை ஒழித்து விடுவதாக அரசு முடிவு எடுத்து இருப்பதாகவும், அது சம்பந்தமாக 2 நாட்களில் அறிவிப்புகள் அல்லது தீர்மானங்கள் கொண்டு வரப்போவதாக அவர்கள் அங்கேவெளியிட்டு இருப்பதாக செய்திகள் வந்துஇருக்கின்றனவே கொள்கை சம்மந்தமான முடிவுகள் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் போது இங்கே தான் முதலிலே அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு அவையில் விவாதிக்கப்படுவதை நாம் எப்படி இங்கே விவாதிக்க முடியும். அது இன்னும் வெளியில் வரவில்லை. எனக்கு அது பற்றி தெரியாது. (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடு) அது இந்த அவையில் யாருடைய கவனத்திற்கும் வரவில்லை. என்னுடைய கவனத்திற்கும் வர வில்லை. என்னுடைய கவனத்திற்கு வந்த பிறகு சொல்லுகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சனை. மாண்புமிகு உறுப்பினர் திரு.சித்தன் அவர்கள் கிளப்பிய பிரச்சனை. இந்த சபையிலே நாம் இந்த முடிவு எடுத்து அந்த மேல் சபையை கலைக்கலாம் என்று அரசு முடிவு செய்தாலும் கூட அதை இந்த சபையில் தான் முதலில் நமக்கு தெரிவிக்கப்பட்டு அதன் மீது முடிவு எடுத்து அங்கே போகவேண்டும். அந்த சபையில் சொல்லிவிட்டு இங்கே வர முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத் தான் முதலில் சொன்னேன். அங்கே இருக்கிற விவாதத்தை இங்கே நாம் எழுப்ப முடியாது. அது யாருடைய கவனத்திற்கும் இன்னும் வரவில்லை. என்னுடைய கவனத்திற்கும் இன்னும் வர வில்லை.. இங்கே இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் வரவில்லை. ஆனால் உங்களுடைய கவனத்திற்கு மட்டும் தான் வந்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

நாம் எல்லோரும் வாக்களித்த பிறகு தான் அதை எடுக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியும் (குறுக்கீடு).

அவை முன்னவர் வந்தவுடன் கேட்கலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்) அங்கே என்ன தெரிவிக்கப்பட்டது என்பது எனக்கு ஒன்றும் இன்னமும் தெரியாது. என்னுடைய கவனத்திற்கு வந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிறகு தான் நான் சொல்லமுடியும். என்னுடைய கவனத்திற்கு வந்தபிறகு தான் உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாப்பது பற்றி நான் பேச முடியும். (கூச்சல்-குழப்பம்].

திரு. கு. ரமணி : இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சனை வரும்போது அமைச்சரவை முடிவு பற்றி உங்களுக்குத் தெரியாமல்போய்விட்டது என்று சொன்னால், ...(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன அமைச்சரவையிலா இருக்கிறேன்? அமைச்சரவைக் கூட்டத்திற்கா போகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுப்பியதற்கு என்ன விளக்கங்கள் சொன்னேனோ, அதே விளக்கங்களின் அடிப்படையிலே தான் மேலவையிலும், அங்கே இப்பிரச்சனை எழுப்பப்பட்ட போது விளக்கம் சொன்னேன். நேற்று இங்கே சொல்கின்றபோது, இது செயற்குறிப்பு வடிவிலே திட்டவட்டமாக இன்னும் வரவில்லை, ஆக இன்னமும், இந்த நேரம் வரையில், இந்த நாளில் அதற்கான திட்டம் வரவில்லை என்று நேற்றே நான் குறிப்பிட்டேன். அதே நிலையில் தான் இன்றைக்கும் மேலவையில் எழுப்பப்பட்டபோது, திட்டவட்டமான செயற்குறிப்பு இல்லை, கொள்கை அளவிலே அதுபற்றிய ஒரு எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது, அது ஆய்வில்இருக்கிறது. அப்படி ஏதாவது செயற்குறிப்பு முன்வருமானால், இரண்டொரு நாட்களில் அதுபற்றிய முடிவு ஏற்படும். முறைப்படி சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டதற்குப் பிறகு, உறுப்பினர்களுடைய எண்ணங்கள் அத்தனையும் அறியப்படும். அறியப்பட்டதற்குப் பிறகு, எல்லோருடைய எண்ணங்களின் அடிப்படையில் தான் முடிவு எடுக்கப்படும் என்று தான் நான் குறிப்பிட்டேனே தவிர, திட்டவட்டமாக எதுவும் இன்றைய நிலையில் சொல்லவில்லை. கொள்கை அளவிலே வந்து, ஆய்வு செய்யப்படுகிறதே தவிர, இன்னமும் திட்டவட்டமாக அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை என்று நான் நேற்று சொன்னேன். அந்த நிலைதான் இன்றும் இருக்கிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் தெரியும் என்று தான் அங்கே நான் சொன்னேனே தவிர, வேறு எதையும் வாக்குறுதியாகத் தரவில்லை.

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது, பத்திரிகை நிருபர்கள் மூலமாக வெளியிலே வந்திருக்கிற கருத்து நம்முடைய நாவலர் அவர்கள் மேலவையில் கொள்கை அளவில் மேலவையை நீக்குவது என முடிவு எடுத்துள்ளதாகவும் அதைப் பற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் தீர்மானம் வருவதோ, விவாதிக்கப்படுவதோ, சட்டமன்றத்தில் நடைபெறும் என்றும் அந்த அளவிற்கு ஏற்கப்பட்டு விட்டது என்றும் கருத்து சொல்லப்

பட்டதாகத் தெரிகிறது. நிருபர்கள் வெளியிலே என்னைப் போன்றவர்களிடத்தில் அப்படித் தெரிவித்ததனால், அதைப்பற்றி கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆக நிச்சயமாக மேலவையை முடிப்போம் என்ற கருத்து அவை முன்னவர் பேச்சுமூலமாக வெளியே வந்திருக்கிறது. அப்படி தெரிவிக்கவில்லை என்றால், பத்திரிகை உலகத்திற்கு உடனடியாக அவை முன்னவர் விளக்கம் தந்தாகவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

இப்போதும் அப்படி ஏதாவது தவறான கருத்துக்களிலே பத்திரிகை நிருபர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த அவைக்கு வந்திருக்கிற நிருபர்களும், அந்த அவைக்கு செல்கிற நிருபர்களும் வேறு, வேறாக இருந்தாலும் அவர்கள் ஒரே பத்திரிகையைச் சார்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக, அவர்களை இங்கே இருப்பவர்கள் திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஆண்டறிக்கை காலதாமதமாக அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஒழுங்குப் பிரச்சனை. இந்த மாமன்றத்திலே அரசு சார்பாக இருக்கின்ற நிறுவனங்கள், ஆணையங்களுடைய ஆண்டு அறிக்கை. உரிய காலத்தில் இங்கே வைக்கப்படுவது இல்லை. பல ஆண்டுக்காலம் கால தாமதமாக வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் எழுப்பப்பட்டிருக்கிறது. அண்மையில் கூட இந்த நிகழ்ச்சியில் புதிதாக சேர்ந்த ஒன்று Annual Report of the Public Service Commission. இந்த தேர்வாணைக் குழுவினுடைய 1979–80 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே கால தாமதத்திற்கு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது, அது வேடிக்கையாக இருக்கிறது. அதாவது அரசு அச்சகத்திற்கு அனுப்பி அதன் மூலமாக பெறுவதற்கு காலதாமதம் ஆகியிருக்கிறது என்று முன்னால் ஒரு செய்தியும், பின்னால் இந்த ஆண்டு அறிக்கையில் 8 இனங்களுக்கான விளக்க குறிப்புகள் துறையிலிருந்து வராத காரணத்தால் தான் இந்த மாதிரி கால தாமதம் ஆகியிருக்கிறது என்று சொல்லி தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரால் இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் உங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த ஆண்டு அறிக்கையிலே Government of Tamil Nadu 1980 என்று போடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும் எவ்வளவு பழையதாக, கிழிந்த புத்தகமாக இருக்கிறது என்று. எனவே தொடர்ந்து இந்தமாதிரி கால தாமதமாக வைப்பது பற்றி இந்த தேர்வாணைக்